11th March 1963] [திரு. டி. கர்ச்சா கவுடர்]

அடுத்தபடியாக எங்கள் ஜில்லாவில் ஏற்பட்டுள்ள அதிர்ச்சியான நிலைமை ஒன்றை நான் கனம் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். குறிப்பாக எங்கள் மாவட்டத்தில் உருளைக் கிழங்குப் பயிருக்கு (**Late blight**) 'லேட ஃபிளைட் என்ற ஒரு கொடுமையான நோய்வந்து பயிர்கள் எல்லாம் பெரிதும் நாசமடைந்திருக்கின்றன. குறிப்பாக முன்பு 20 ஆயிரம் எக்கராவில் உருளைக்கிழங்கு பயிரிட்டு வந்தார்கள் என்றால் இப்போது அது ஐந்தாயிரம் எக்கராவாகக் குறைந்திருக்கிறது. அந்த உருளைக்கிழங்குப் பயிரையே நம்பி வாழ்ந்து வந்த மக்கள் இப்போது வேறு என்ன பயிர்செய்வது என்று வழி தெரியாமல் மிகவும் தொல்லைக்குள்ளாகி யிருக்கிறார்கள். இதை அமைச்சரிடத்தில் நேரில் பல முறை சென்று நான் சொல்லியிருக்கிறேன். இதுவரை யாதொரு நிவாரணமும் ஏற்படவில்லை என்பதை மிக்க வருத்தத்துடன் கூற விரும்புகிறேன்.

எங்களுக்கு இன்றையதினம் ஸ்காட்லாண்டு உருளைக்கிழங்கு விதை இரண்டாயிரம் டன் வேண்டும். தற்போது இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன் ஸ்காட்லாண்டில் இருந்து 53 டன் தான் தருவித்து இருக்கிறார்கள். இது எப்படித் தேவையைப் பூர்த்தி செய்யும் என்று விளங்கவில்லை. சர்க்கார் விதைப் பண்ணையிலேயே விதை கிழங்கு மூட்டை ஒன்றுக்கு இன் றையதினம் 90 ரூபாய்க்கு விற்கிறார்கள் என்றால் அவ்வளவு விலை கொடுத்து யாரால் வாங்க முடியும்? ஏதோ பணக்காரர்கள் தான் வாங்கலாம். அப்படியின்றி எல்லோருக்கும் கிடைக்கக்கூடிய வகையில் இந்த விதையைக் குறைந்த விலையில் கொடுக்க தக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக டைதேன் மருந்து. இந்த மருந்தை அடித்தால் தான் நோய் போகும் என்று சொல்கிறார்கள். இந்த மருந்து 200 டன் தேவை என்றால் 20 டன் தான் தருவித்துக் கொடுத்திருக்கிறார்கள். இதற்கும் ஏதாவது வழி செய்ய வேண்டும் என்பதாகக் கேட்டுக் கொள்கிறேன். அமோனியம் சல்பேட்டைப் பொறுத்த வரையில் எங்கள் மாவட்டத்திற்கு 1,500 டன் ஒதுக்கியிருக்கிறார்கள். அந்த அமோனியம் சல்பேட்டில் பத்துப் பதினைந்து சதம் விவசாயிகளின் பரிதாப நிலைமையை உத்தேசித்து குறைந்த விலையில் கொடுக்குமாறு நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

எங்கள் ஜில்லாவில் தக்காவிக் கடன் பூரணமாக வசூலாகாமல் இருக் கிறது. இந்தக்கடனை நான்கைந்து ஆண்டுகள் தள்ளிக்கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கூட்டுறவு சங்கங்கள் மூலம் கொடுக்கப்பட்ட தொகை 50 லட்சம் ரூபாய். மத்திய பாங்க் அந்தக் கடன் தொகை வசூலை வற்புறுத்துவதால் நடவடிக்கை ஜரூராக எடுக்கப்பட்டு வருவதாகத் தெரிகிறது. அதை மத்தியக்காலக் கடனாக மாற்றி ஐந்து வருஷங்களுக்குள் வசூல் செய்து கொள்ளலாம் என்றும், மேலும் 20 லட்சம் ரூபாய் நீலகிரி கூட்டுறவு மத்திய பாங்குக்கு நீண்டகால டெபாசிட் டாக கொடுத்து நீலகிரி மாவட்டத்தை ஆதரிக்குமாறு கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

* **திரு. மு. கருணாநிதி**: சட்டமன்றத் துணைத்தலைவர் அவர்களே, வேளாண்மைத் துறைபற்றி கனம் எதிர்க்கட்சி அங்கத்தினர் தந்திருக்கிற வெட்டுப் பிரேரணைக்கு ஆதரவாக என்னுடைய கருத்துக்களை நான் எடுத்துக் கூற விரும்புகிறேன்.

விவசாயத்துறையில் இந்த நாட்டு உழவர் பெருங்குடி மக்கள் எந்த அளவுக்கு இன்றையதினம் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற புள்ளிவிவ ரங்களை இந்த மன்றத்தில் பேசிய எதிர்க்கட்சி உறுப்பினர்கள் மிக அழகாக எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். அவர்களுடைய குறைந்த வருமானமும், அவர்கள் தலையில் விழுந்திருக்கிற பெருத்த செலவுகளும் எந்தவகையில் உழவர்கள் குடும்பங்களில் வறுமைப் புயலை நுழைய விட்டிருக்கிறது என்ற விவரங்கள் இங்கே எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது. இந்த நாட்டில் இருக்கிற ஏழை விவசாயி களுடைய கூலியைக் குறைந்தபட்ச கூலியாக ஆக்க வேண்டுமென்ப

தற்கான காரணங்களை இந்த வெட்டுப் பிரேரணையை முன்மொழிந்து பேசிய கனம் உறுப்பினர் திரு. கோ. சி. மணி அவர்கள் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். குறைந்தபட்ச கூலி விகிதம் இல்லாத காரணத்தினால் ஆங்காங்கு நிலப் பிரபுக்களுக்கும், தனிப்பட்ட விவசாயிக் கூலிகளுக்கும் இடையே நடைபெறுகின்ற சச்சரவுகளில் காவல்துறையினர் கூடச் சரியான நீதியை வழங்க முடியாத அளவுக்கு பிரச்சனை பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதைக் கண்கூடாகக் காண்கிறோம். குறைந்தபட்சக் கூலி என்று நிர்ணயித்து விடுவோமேயானால் ஏழை விவசாயிகளுக்கு இன்ன வேலைக்கு இன்ன அளவு கூலி கிடைக்கும் என்ற அளவில் ஒரு ஒழுங்கு ஏற்பட்டு கழனிகளில் சென்று களிப்போடு வேலை செய்வதற்கான வாய்ப்பும் வசதியும் ஏற்படும். ஆகவே இந்த மன்றம் விவசாயிகளுக்குக் குறைந்தபட்சக் கூலியை நிர்ணயிப்பதில் தீவிரம் காட்டவேண்டுமென்று இந்த வெட்டுப் பிரேரணையை ஆதரித்துப் பேசுகின்ற நேரத்தில் நான் எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

நம்முடைய நாட்டைப் பொறுத்த வரையில் இந்த ஆண்டு ஒரு உணவுப் பொருளின் விலை கிராக்கியாக விற்பனையாகிறதென்றால் உடனடியாக அதே உணவுப் பொருளை மற்ற எல்லா விவசாயிகளும் உற்பத்தி செய்ய முன்வந்து விடுகிறார்கள். அதன் காரணமாக அந்த ஆண்டு அந்த உணவுப் பொருளின் விலை ஒரேயடியாகச் சரிந்துவிடுகிறது. இத்தகைய ஒரு சூழ்நிலைதான் நம் நாடெங்கும் ஏற்பட்டிருக்கிறது. அமெரிக்க நாட்டை எடுத்துக் கொண்டால் அங்கங்கே பயிரிடப்படுகிற விளை பொருள்களின் மதிப்பு திடீரென்று குறைந்துவிடாதிருக்க, அங்கங்கே குறிப்பிட்ட அளவுக்குத்தான் குறிப்பிட்ட தானியங்களைப் பயிரிடலாம் என்ற அளவு நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. அதேமாதிரியாக இன்ன இன்ன பூமியில் இன்ன இன்ன அளவுக்குத்தான் இன்ன இன்ன பயிரை வைக்கலாம் என்ற அளவு நிர்ணயிக்கப்படுமானால் விவசாயப் பொருள்களின் விலையில் திடீர் சரிவு ஏற்படாது என்று சொல்ல விரும்புகிறேன்.

குறிப்பிட்ட பொருள்களைத்தான் விளைவிக்க வேண்டுமென்ற ஒரு கட்டுப்பாடும், அப்படிப்பட்ட ஒரு நிர்ணயமும் நம்முடைய நாட்டிலும் கொண்டு வரப்படுமானால் உணவுப் பொருள்களுடைய மதிப்புக் குறையாமலும், கிராக்கியாகச் சென்ற ஆண்டு விற்ற உணவுப் பொருள் இந்த ஆண்டு மலிந்து போகிற நிலைமையையும் தவிர்க்க முடியும். தவிர உற்பத்தி செய்கிற ஏழை விவசாயக் குடிமகன், உற்பத்திக்கும், தன் தேவைக்குமான வேறு பொருள்களை, வேறு பண்டங்களை வாங்குகிற நேரத்தில் அவைகளுடைய விலை பெரிதும் ஏற்றம் பெற்றிருக்கிற காரணத்தினால் அதைத் தாங்க முடியாத அளவுக்கு, அவனுடைய இல்லத்தை இன்னல் தொடர்ந்து கொண்டிருக்கிறது என்பதை நாம் காண்கிறோம். ஆகவே, அதை மனதில் கொண்டு, இந்த அரசினர் உணவு தானியப் பொருள்கள் விளைவிப்பதில் ஒரு நிர்ணயம் செய்வது சாலச் சிறந்ததாகும் என்று எடுத்துக் காட்ட விரும்புகிறேன். விவசாயிகளுடைய வாழ்க்கை வேதனை நிரம்பியதாக இருக்கிறதென்பதையும், அவர்கள் பெறுகின்ற வருமானம் மிக மிகக் குறைவாக இருக்கிறதென்பதையும் எடுத்துக் கூறும் நேரத்தில், ஆளும் கட்சி உறுப்பினர்கள், அதிலும் குறிப்பாக, காங்கிரஸ் கட்சியின் தலைவர் கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் பேசுகிறபோது குறிப்பிட்டார்கள்—'இந்த நாட்டின் கிராமப் புறங்களைப் போய்ப் பார்த்தால் எங்கு பார்த்தாலும் வளமை கொஞ்சுகிறது, பேன் இல்லாத தலை இருக்கிறது, சட்டை இல்லாத ஆள் இல்லை, ஈருளி கேட்டால் கிடைப்பதில்லை' என்று நாட்டினுடைய முன்னேற்றத்தைப்பற்றி எடுத்துக் கூறினார்கள். அதே நேரத்தில் அன்றாடம் ஏடுகளில், 'பட்டினியின் காரணமாகத் தங்களுடைய குழந்தைகளைப் பதைபதைக்கக் கொன்றுவிட்டுத் தாங்களும் தற்கொலை செய்து கொண்டார்கள்' என்ற செய்திகளும் வெளிவருகின்றன. 1961-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 12-ஆம் நாள் நடைபெற்ற வழக்கில் உயர்நீதிமன்ற நீதிபதிகள் அளித்துள்ள தீர்ப்பினுடைய சாராம்சத்தை இங்கே எடுத்துக் கூறுவது பொருத்தமாக இருக்கும் என்று நினைக்கிறேன்.

11th March 1963] [திரு. மு. கருணாநிதி]

கரூரில் காமாட்சி என்ற 25 வயது கூட நிரம்பாத ஒரு பெண், தன்னுடைய இரண்டு குழந்தைகளைக் கொன்றுவிட்டு, தன்னுடைய மூத்த மகனைக் கொல்ல முயன்றதாகவும், தானும் தற்கொலை செய்ய முயன்றதாகவும் குற்றம் சாட்டப்பட்டு ஆயுள் தண்டனை அளிக்கப்பட்டார். ஆயுள் தண்டனையை எதிர்த்து உயர்நீதி மன்றத்தில் அப்பீல் செய்யப்பட்டபோது, ஏற்கெனவே அளித்த அந்தத் தண்டனை உறுதி செய்யப்பட்டாலும் கூட, உயர்நீதிமன்ற நீதிபதிகளான எம். அனந்தநாராயணனும், திரு. டி. வெங்கடாத்ரியும் வழக்கை விசாரித்து நீதி வழங்கும் நேரத்தில் குறிப்பிட்ட ஒரு வாசகத்தைப் படிக்க விரும்புகிறேன்.

"வாழ வழியின்றி வறுமையின் காரணமாகக் குழந்தைகளைக் கொன்றாள். இதற்குப் பரிகாரம் காணுவது சர்க்கார் பொறுப்பு. மக்கள் எப்படியாவது வாழ்ந்தால் போதும் என்பது சர்க்காரின் இலட்சியமாக இருக்கக்கூடாது. அவர்கள் நல்வாழ்க்கை நடத்த வேண்டிய வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டியது சர்க்காருடைய பொறுப்பாகும்.

குற்றத்தை மெய்ப்பிக்கும் சாட்சியங்களைப் பற்றியும் குற்றத்திற்குரிய தண்டனைகளைப்பற்றியும் தான் எம்மைப் போன்ற நீதிபதிகள் கவனிக்க வேண்டும். குற்றத்திற்கான காரணங்களைக் கண்டு பிடிக்கும் பொறுப்பு சீர்திருத்தவாதி அல்லது அரசியல் வாதியைச் சேர்ந்தது.

இந்த வழக்கில் செய்யப்பட்ட குற்றம் தனி மனிதர் செய்த குற்றமல்ல; சமூகத்தையே உறுத்துகின்ற பரிதாபகரமான செயல். இம்மாதிரி நடைபெற அனுமதிக்கக்கூடாது.

ஏனைய நாடுகளிலே வறுமையில் உழல்பவர்களுக்கு, ஏதாவது வேலையளித்து, தேவையான ஊதியம் அளிக்கும் நிறுவனங்கள் ஏராளம் இருக்கின்றன.

நமது மாநிலம் விவசாயத்தை முக்கியமானதாகக் கொண்டது. சாகுபடி காலத்தில் வேலை வாய்ப்புகள் இருக்கின்றன. இப்படிப்பட்ட மாநிலத்தில் இது போன்ற நிறுவனங்களை ஏற்படுத்துவதற்குத் தொல்லை இருக்காது. அப்படி ஏதாவது தொல்லைகள் இந்தப் பிரச்னையில் ஏற்பட்டால் அதைச் சமாளிக்க வேண்டும். எதிர்காலத்திலாவது இது போன்ற நிகழ்ச்சிகள் ஏற்படக்கூடாது.

பரிதாபத்திற்குரிய இந்த அப்பீல் மனுதாரரும் அவருடைய கணவரும் நல்ல உடல் வலிமையுள்ளவர்களாக இருந்தும், பிச்சையெடுக்கத் துணியாத காரணத்தினால் இத்தகையதோர் இழிவான வழிகளில் இறங்க நேரிட்டதற்குத் தேவையில்லாதவாறு சீர்திருத்தங்களைச் செய்ய வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பு"

என்று தங்களுடைய தீர்ப்பிலே இரண்டு நீதிபதிகளும குறிப்பிட்டிருக்கிறார்கள். இதை நான் அரசாங்கத்தைக் குற்றம் சாட்டுவதற்கு எடுத்துக் கூறுவதாகத் தயவுசெய்து கருதக் கூடாது. நீதிபதிகள் சொன்ன கருத்தை இந்த அரசினர் தங்கள் இதயத்தில் ஏற்றி, நாட்டிலே தற்கொலைக்கு வழி இல்லாதபடி, ஒரு முழக் கயிற்றை, ஒரு துளி விஷத்தை, ஆழமான கிணற்றைத் தேடிக் கொண்டிருக்கும் ஆயிரக்கணக்கான அபலைகளை, அனாதைகளை, ஏழை உழவர்களைக் காப்பாற்ற இந்த அரசு முன்வரவேண்டுமென்றுதான் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த மானியத்திலே, கால்நடை வளர்ச்சியைப் பற்றிப் பலர் எடுத்துக் கூறினார்கள். அவைகளைப் பற்றி என்னுடைய கருத்தைத் தெரிவிக்கும் நேரத்தில், "இந்தியக் கால்நடைகளின் எண்ணிக்கை பெரிதேயன்றி அவற்றின் தரம் உயர்ந்ததன்று. இந்தியப் பசு சராசரி 413 ராத்தல் பால் தருகிறது. பிற நாடுகளில் 2,000 முதல் 7,000 ராத்தல் வரை பால் தரும் பசுக்கள் உள்ளன. பெரும் பான்மையும் பயனற்ற கால்நடைகளாக இருப்பதால் அவை உழவர்களுக்குப் பாரமாகவே உள்ளன" என்று இந்த மன்றத்தில் வீற்றிருக்கிற டாக்டர் பா. நடராசன் அவர்கள் ஒரு நூலில் குறிப்பிட்டிருப்பதை எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

[திரு. மு. கருணாநிதி] [11th March 1963

அடுத்த மாதம் இந்தியாவுக்கு விருந்தினராக வர இருக்கின்ற லார்டு லிட்டன் என்ற பெரியவர் " ஹவுஸ் ஆப் லார்ட்சில் " மார்ச் மாதம் 5-ஆம் தேதியன்று பேசியிருக்கும் பேச்சைக் குறிப்பிட விரும்புகிறேன்.

" இந்திய மக்களது நிலங்களில் உலா வந்திடும் பல்லாயிரக் கணக்கான மிருகங்கள் கொல்லப்பட இந்திய மக்களது மத நம்பிக்கை அனுமதித்தால் இந்தியாவின் உணவுப் பிரச்னையின் பெரும் பகுதி நிவர்த்தி செய்யப்படலாம் "

என்று அவர் பேசி யிருக்கிறார். இதை நான் எடுத்துச் சொல்லுகின்ற நேரத்திலே, ' பசுக்களைக் கொல்வதா கால்நடைகளைக் கொல்வதா, என்று என்மீது சிலர் பாய்ந்திடக்கூடும். அவர்களுக்கு நான் ஒன்றை எடுத்துக் காட்ட விரும்புகிறேன். இந்திய சர்க்காருடைய செலவில், விவசாய முறைகளையும், கால்நடைகளையும் பற்றி அறிந்து வருவதற்காக அமெரிக்கா சென்று திரும்பி, அருமையான புத்தகம் ஒன்றையும் எழுதியிருக்கிறார், பழைய கோட்டையைச் சேர்ந்த கனம் பார்வதி அர்ச்சுனன், எம்.எல்.ஏ., அவர்கள். அவர்கள், ' எனது வெளிநாட்டு அனுபவம் ' என்ற நூலில்.—

" அமெரிக்காவில் பாலுக்குத் தகுதியற்றதாக இருக்கும் பசுக்களையெல்லாம் ஒழித்து விடுகிறார்கள். அதனால் அந்த விவசாய மக்கள் பொருளாதாரத் துறையில் முன்னேறுவதற்கு இந்த முறை ஓரளவுக்குத் துணை புரிகிறது."

என்று கூறிவிட்டு, அடுத்து அம்மையாருக்கு இந்தியாவின் மத நம்பிக்கை பற்றிய பயம் வருவதன் காரணமாக—

"சர்க்கார் இது பற்றி நன்கு சிந்தித்து வீணாகும் நாட்டின் பொருளாதார விரயத்தைத் தடுக்க வேண்டும். பசுக்களைத் தெய்வம் எனத் துதிக்கும் நமது நாட்டில் இந்த விஷயத்தில் குறிப்பாகவும் ஆழ்ந்தும் சிந்தித்து ஒரு முடிவை எடுக்க வேண்டும். அப்போதுதான் விவசாயத் துறையில் நாம் கணிசமான அளவு முன்னேற்றத்தைக் காண முடியும்", என்று அம்மையார் அவர்கள் அந்த நூலில் குறிப்பிட்டிருக்கிறார்கள். இதையும் மனத்திலே வைத்து, இந்த நாட்டின் விவசாயிகளுடைய நிலை உயர கால்நடை வளர்ச்சி எவ்வளவு இன்றியமையாதது என்பதை உன்னிப் பார்த்து, எதிர்க்கட்சி சார்பில் எடுத்துரைக்கப்பட்ட—குறைந்தபட்ச கூலி நிர்ணயம்——விளைபொருள்களை விளைவிக்க நிர்ணயம் செய்யவேண்டும் என்பது பற்றிய கருத்துக்களையெல்லாம் மனத்தில் கொண்டு செயல்படுத்த வேண்டு மென்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* **திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் விவசாய மானியக் கோரிக்கையை ஆதரித்து ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். கனம் அங்கத்தினர்கள் பேசும்போது ' விவசாயிகளுக்குக் கூலி நிர்ணயம் செய்ய வேண்டும் ' என்று பேசினார்கள். விவசாயத்தைப்பற்றி இன்னது என்று தெரியாதவர்கள்தான் அப்படிக் கூறுவார்கள். அறுவடைக் காலத்தில், ஒரு ஏக்கருக்கு இத்தனை மூட்டை, இத்தனை கட்டுக் கதிர் என்ற முறையில் பேசி, அதன் காரணமாகச் சில சமயங்களில் 10, 12 படி கூடக் கொண்டு போகக் கூடிய நிலைமை இருக்கிறது. அவர்களுக்குக் கூலி நிர்ணயம் என்று செய்துவிட்டால்—4 படி என்று செய்து விட்டோம் என்று வைத்துக் கொண்டால் அவர்களால் அதற்கு மேல் கூலி பெற முடியாத நிலைமை உண்டாகிவிடும்.

விவசாயிகளின் நன்மையைக் கருதி நம்முடைய அரசாங்கமானது பல கோடிக்கணக்கான அளவுக்குப் பணத்தைச் செலவு செய்து வருகிறது. உரம் தயாரிப்பதிலிருந்து விதைகள் கொடுப்பது வரை அரசாங்கம் விவசாயிகளுக்காக உதவி செய்து வருகிறது. இப்போது சாபக்கேடு போன்று அவர்களுடைய உணவு தானியங்களுக்கு மூட்டை ஒன்றுக்கு 17, 18 ரூபாய்